உ

திருச்சிற்றம்பலம்.

சிவஞானப் பயன்

(திருவானைக்காப்புராணம் ஞானோபதேசப் படலம்)

மூலம்:

திருவாவடுதுறை ஆதீனம்

கச்சியப்ப முனிவராலும்

பொருள்:

தூத்துக்குடி, "சித்தாந்தப் பேராசிரியர்"

ந. சிவகுருநாத பிள்ளையாலும்

இயற்றப் பெற்றன

திருவாவடுதுறை ஆதீனம் இருபதாவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

தென்னாட்டுத் திருத்தலயாத்திரையில், விகிருதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 14-ஆம் நாள் (30—10—50) ல் தூத்துக்குடி சைவசித்தாந்த சபைக்கு எழுந்தருளி அருட்காட்சியளித்ததின் நினைவு மலராக இது வெளியிடப் பெற்றது.

தூத்துக்குடி,

சைவசித்தாந்த சபை.

1950.

விலை அணா 3]



இருபதாவது குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்
திருவாவடுதுறை ஆதீனம்.

S. KUTTALALINGAM PILLAI & 2 OTH
LICENCIES: M. E. No. 3.
LEVINGIPURAM SALT FACTORY
51, VADY STREET,
TUTICORIN.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தர் துணை.



சிவஞானப் பயன்.

செந்தமிழ் நாட்டுச் சைவ வுலகம் செய்த தவப்பயனாய்த் தோன்றித் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த மெய்கண்டதேவ நாயனார் அருளியது சிவஞான போதம். அதற்குச் "சிவஞான மாபாடியம்" எனப் பேருரை யொன்றும், சிற்றுரை யொன்றும் வழங்கியருளியவர் ஸ்ரீ மாதவச் சிவஞான முனிவர். அவர்பால் நேர் மாணவராயிருந்து அருளுரை கேட்டுச் சிவஞானப் பயன் எய்திய சைவச் செல்வருள் தலையாயவர் கச்சியப்ப முனிவர். அவர் தாம் பெற்ற சிவஞானப் பயனைத் திருவானைக்காப்புராணத்தாலும், திருப்பேரூர்ப் புராணத்தாலும், திருத்தணிகைப் புராணத்தாலும் நமக்குத் தெளிவுற எடுத்துணர்த்தியுள்ளார். திருவானைக்காப்புராணத்து ஞானோபதேசப்படலத்து வழங்கப்பெறும் சிவஞானப் பயன் ஈண்டு காட்டப் பெறுகிறது.

புராண வரலாறு.

உலகெலாமாகி, வேறாகி, உடனுமாகி நிற்கும் சிவபரம்பொருள்; ஒருகால் கயிலையில் கல்லாலின் கீழே தென்முகம்

நோக்கி யோக நிலையில் இருந்தார். உடனிருந்து பணிபுரிந்து வந்த உமையம்மையார் அப்பொழுது "முழுமுதற் பொருளாகிய எம்பெருமான் மேற்கொண்டிருக்கும் சிவயோகத்தின் குறிப்பு யாதோ?" என ஐயமொன்று நெஞ்சில் ஊசலாடச் சிவ பெருமானை நோக்கினர். உடனே பெருமான் உமாதேவியை அருளொழுக நோக்கி, "தேவி, மண்ணுலகில் காவிரியாற்றின் இடைக்குறையில் ஆனைக்காவென்று ஒரு பொழில் உளது; அங்கே சென்று நீ எம்மை நோக்கித் தவம் செய்க; யாம் அங்கே வந்து ஞான யோகக் குறிப்பை உணர்த்துவோம்" என மொழிந்து விடை கொடுத்தனுப்பினர். உமையம்மையாரும் அவ்வாறே சென்று, திருவானைக்காவில் நாவல் மரமொன்றின் கீழ் இருந்து தவம் செய்தார். அத்தவ முதிர்ச்சியில் சிவபெருமான் எழுந்தருளிச் சிவஞானக் குறிப்பை உரைத்தருளத் திருவுள்ளங்கொண்டார். சிவபெருமான் எழுந்தருளியதும் நாவல் மரமாய் நின்றிருந்த சம்பு என்னும் முனிவன் பழைய உருக்கொண்டு நின்று பெருமானையும் உமையம்மையாரையும் வணங்கித் தொழுது நின்றான். பின் நிகழ்ச்சியை நூலின்கண் காண்க.

இவ்வரிய நூலின் பொருள்களை நன்கு திருத்தம் செய்து உதவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. "சித்தாந்த கலாநிதி" ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கட்கு மிகவும் நன்றி செலுத்தப்பெறுகின்றது.

நூல்.

சந்த வான்மதி மிலைச்சிய தாழ்சடை யழகர்
நந்தி வாண்முக நோக்கினர் நந்திதாழ்ந் தெழுந்து
முந்த னுர்திரு வுளத்தெழு முன்னமிக் கறிந்திட்டு
அந்தின் மேயினு ரியாரையும் புடையகற் றினனுல்.

(பொருள்) அழகிய வெண்பிறை சூடித் தாழ்ந்த சடையை யுடைய அழகராகிய சிவபெருமான், நந்தி தேவருடைய ஒளி திகழும் முகத்தை நோக்கினுர்; நந்தி தேவர் முன்னேனுகிய பரமன் திருக்குறிப்பை யுணர்ந்து அங்கே கூடியிருந்தவர்களில் சம்பு முனிவனை யொழிய மற்றெல்லோரையும் புறம்பே ஏகுமாறு கட்டளையிட்டார்.

சந்தம் – அழகு. மிலைச்சிய – சூடின. முந்தன் – முன்னேன். முன்னம் – குறிப்பு. அந்தில் – அசை. புடை – பக்கம்.

2 சம்பு மாதவ னந்தியென் றிருவருந் தவங்க
ளும்ப ரார்க்கரி யனமிக வுஞற்றிய பேற்றுல்
அம்பர் மாதுமை யாளொடுங் கேட்கிய வருள்பெற்று
எம்பி ரானிருந் தருள்புரி மண்டப மிழைத்தார்.

(பொருள்) சம்பு முனிவர், நந்தி தேவர் என்ற இருவரும் தேவர்களாலும் செய்தற்கரிய தவம் பல செய்திருக்கும் சிறப்பினுல், அங்கே உமாதேவியாரோடு இருந்து கேட்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்டனர்; உபதேச மண்டபம் ஒன்று அழகியதாக அமைக்கப் பெற்றது.

உம்பரார் – தேவர்கள். உஞற்றிய – செய்த. பேற்றுல் – தவச் சிறப்பால். அம்பர் – அங்கு. கேட்கிய – கேட்பதற்கு. இழைத்தார் – நிருமித்தார்.

3 சிமைய மால்வரை யெனச்சிறந் தொளிருமண் டபத்தி
னமையு மாதனத் தங்கணன் வீற்றிருந் தருளி
யுமையை நோக்கிநீ யோகுழப் பதின்வினு யினையாற்
சமைய மாறுமுய்ந் திடவது கேளெனச் சாற்றும்.

(பொருள்) மேரு மலைபோல் சிறந்து விளங்கும் அம்மண்டபத்தில் அமைக்கப் பெற்ற இருக்கை மீது இறைவன் இருந்து கொண்டு, உமாதேவியாரைப் பார்த்து, "நீ முன்பு யாம் யோகம் புரிந்ததன் கருத்தை யாதெனக் கேட்டனை யன்றோ" அதனை உரைப்போம்; கேட்பாயாக. அதனால் அறுவகைச் சமயங்களிலுமுள்ள ஆன்மாக்கள் சிவஞானம் பெற்று உய்வதற்குப் படி முறையாய் அமைந்து பெறும் என அருளுவராயினர்.

சிமையம் – மேருமலை. ஒளிரும் – விளங்கும். அங்கணன் – சிவபெருமான். யோகு உழப்பது – யோகம் புரிவது. அறுவகைச்சமயம் – உலகாயதம், நியாயம், சாங்கியம், யோகம், வைசேடிகம், மீமாஞ்சை.

இது, சிவஞானம் சமயாதீதம் என்று கூறியது.

4 உலக மியாவையு மோங்கிய நமதருள் வழியி
நிலவு நீர்மைய வாதலி னிழன்மணிப் பூணுய்
இலக வாட்டுவா னடிமுன் காட்டுமா றென்னப்
பலவும் நாம்பயின் றுலகினைப் பயிற்றுதல் வேண்டும்.

(பொருள்) எல்லா வுலகங்களும் உயரிய நமது ஆணையாகிய சத்தியின் வழியே ஒழுகும் தன்மையுடையவை; ஆடல் கற்பிக்கும் ஒருவன், தான் முன்னே நின்று நன்கு ஆடிக்காட்டுவதுபோல, போக யோகங்களை நாம் முன்னே செய்துகாட்டி உலகத்தவர்களைப் பயிற்ற வேண்டும்.

உலகம் யாவையும் – காலாக்கினி யுருத்திர முதல் அநாசிருதை யீறாகவுள்ள இருநூற்றிருபத்து நான்கு புவனங்களிலுமுள்ள உயிர்கள். நிழல் மணிப் பூணுய் – ஒளி பொருந்திய மணிகள் இழைத்த பூணுரமணிந்தவளே. அருள் – அருட்சத்தி. இலக – நன்கு விளங்க.

இது சிவபெருமான் உயிர்க்குயிராம் தன்மையனு யிருத்தலை விளக்கியது.

5 ஆகை யான்மல பந்தமா கியவுயிர் மாயா
போக மார்தர நிற்றழீஇப் போகியா யிருந்தும்
யோக மாற்றிமெய்ஞ் ஞானமுற் றுயர்சிவ யோகத்
தேக மாகிவீ டெய்திட யோகியா யிருந்தும்.

(பொருள்) ஆதலால், ஆணவ மலத்தாற் கட்டுற்றுக் கிடக்கும் உயிர்கள், மாயா காரியங்களாகிய உடம்பு, கருவி, உலகு என்ற இவற்றைக் கொண்டு, அம்மாயா போகங்களை நுகரும் பொருட்டு உன்னோடு கூடிப் போகியாக இருப்போம்; மலபந்தமற்ற உயிர்கள் உண்மை ஞானமெய்திச் சிவயோகத்தால் நம்பால் ஏகமாகி அவ்விடத்தே காணப்படும் ஞேயமாகிய நமது சிவபோகத்தில் அழுந்துவது குறித்துச் சிவயோகத்தை மேற்கொண்டு யோகியாய் இருப்போம்

மலபந்தம் — ஆணவ மலத் தொடர்பு. மாயா போகம் — மாயையின் காரியங்களால் வரும் சுக துக்கங்கள். நிற்றழீஇ — நின்னைக் கூடி. போகி — போகம் நுகர்பவன். ஆற்றி — செய்து. இருந்தும் — இருப்போம்.

இஃது இறைவன் போக வடிவம், யோக வடிவம் கொள்வது உயிர்கள் போகம் நுகர்ந்து பக்குவம் அடைந்து அதனால் வீடு பெறும் பொருட்டே என்பது.

6 விரைத்த மென்மலர் வாளியான் விளிந்தகா ரணமும்
நிரைத்த வையகத் தியாவரும் நேரிழை யவர்பால்
வரைத்த வின்னலம் நுகர்ந்தகா ரணமுமா னனையா
யுரைத்த வொண்பொரு ளிரண்டற்குஞ் சான்றென வுணர்தி.

(பொருள்) நல்ல மணமுடைய பூக்களை அம்பாகக் கொண்ட மன்மதன், வெந்து சாம்பரான காரணமும், வரிசையாக அமைந்துள்ள உலகத்தில் யாவரும் மகளிரோடு பொருந்தப் பெற்றுள்ள இல்லற இன்பத்தை அனுபவிக்கும் காரணமும், மேலே சொன்ன போகம் வீடு என்ற இரண்டுக்கும் சான்றென அறிக.

விரை — வாசனை. வாளியான் — மலரம்புடைய மன்மதன். விளிந்த — இறந்த. நேரிழையவர் — நேர்மையுடைய ஆபரணமணிந்த மகளிர். வரைத்த — அமைத்துள்ள. இரண்டு — போகம், வீடு என்ற இரண்டு.

இது இறைவன் போகியாயும் யோகியாயும் இருத்தல் வேண்டியதின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது.

7 என்று கூறலு மகிழ்ந்துமை யிறைஞ்சியீ துரைக்கு
மொன்று மாமலத் தழுந்திய வுயிரெலா மாயைத்
துன்று போகமுற் றுனதருண் ஞானத்தாற் றுகடீர்
நன்று வீட்டினை நண்ணுமென் றுரைத்திநா யகனே.

(பொருள்) என்று இவ்வாறு சிவபெருமான் உரைத்தருளவும், உமாதேவியார் மகிழ்ந்து வணங்கி நின்று, இதனைக் கூறுகின்றார்: "நாயகனே, ஆணவ மலத்தோடு அத்துவிதமாய்க் கலந்துள்ள உயிர்களெல்லாம், மாயையின்கண் விளையும் போகத்தை நுகர்ந்து, பின்னர்த் தேவரீருடைய என்றும் அழியா இன்ப நிலையமாகிய வீடு பேறு எய்தும் என்று உரைத் தருளுகின்றீர்."

ஒன்று அழுந்திய – அத்துவிதமாய்க் கலந்துள்ள. மாயைத் துன்று போகம் – மாயையின்கண் கருமத்தால் விளையும் சுக துக்கங்களாகிய போகம். துகள்தீர் – குற்றமில்லாத.

8 இருளு மாமலம் யாதுயிர் யாதியா மாயை
கரும மியாதுமெய்ஞ் ஞானமியா தியாதுகாண் முத்தி
பொருவி லாவிவை யனைத்தையும் புகரற வடியேன்
றெருளு மாறரு ளுதியெனச் செய்யவாய் மலர்ந்தாள்.

(பொருள்) அறியாமையைச் செய்யும் பெரிய மலம் என்பது யாது? உயிர் யாது? மாயை யாது? கருமம் யாது? மெய்ஞ்ஞானம் யாது? முத்தி யாது? ஒன்றோடொன்றொவ்வாத இவைகளை அடியேன் குற்றமறத் தெளியுமாறு உரைத் தருள வேண்டும் என உமாதேவியார் தமது சிவந்த வாயைத் திறந்து கேட்டார்.

காண், அசை. பொரு – ஒப்பு. புகர் – குற்றம். செய்யவாய் – சிவந்த வாய்.

9 சிலையு யிர்த்தவ ளின்னணம் வினவலுந் தெரிக்குங்
கலைம லர்க்கரத் தணிந்தருள் கண்ணுதற் பெருமான்
இலைமு கத்தபூ ணிளமுலை மாதரா யெல்லாம்
மலைவ றத்தெளிப் பாமதி யெனவிறை வழங்கும்.

(பொருள்) மலையரசன் பெற்ற மகளான உமாதேவியார் இவ்வாறு கேட்கவும், உபதேச கலையைப் பூப்போன்ற கையிலே கொண்டிருக்கும் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான், உமையே, எல்லாவற்றையும் ஐய விபரீதமறத் தெரிவிப்போம், கேட்டுத்தெளிந்து கொள்வாயாக என்று விடைகூறுகின்றார்.

சிலையுயிர்த்தவள் – மலையரசன் பெற்ற மகள். தெரிக்கும் கலை – சின்முத்திரை. இலைமுகத்த பூண் – இலைபோன்ற வேலைப்பாடமைந்த ஆபரணம். மலைவு – சந்தேகம். மதி – தேர்ந்து, தெளிக. இறை – விடை.

10 காள வன்மல மூலந்தங் காலவேல் லைகளின்
மீளு மெண்ணருஞ் சத்திக ளுடையதாய் விரவிக்
கோளு றும்பசு வறிவினைக் கூட்டொடு மறைக்கும்
வாளு றும்பல விழியினை மறைத்திடு மிருள்போல்

(பொருள்) இருண்டவலிய ஆணவமலம் என்பது உயிர்களை அனாதியே பற்றி நின்று அறியாமையைச் செய்து நிற்கும் மூலமலமாகும். அனாதியாயினும் தனக்குரிய காலவெல்லையில் மறைக்கும் சத்திகெடும்; பல வேறுவகைப்பட்ட உயிர்களையும் பல வேறு வகைப்பட நின்று மறைக்கும் எண்ணமுடியாத அநேக சத்திகளையுடையது. எப்படி பொருள்களைக் காணக் கூடிய கண் இருளால் மறைக்கப்படுகிறதோ அப்படியே உயிரறிவு முழுவதும் இந்த ஆணவ மலத்தால் மறைக்கப் படுகிறது.

காளம் – இருள் நிறம். கோளுறும் – கொண்டிருக்கும். கூட்டொடு – முழுவதையும். இது ஆணவமலத்தின் இயல்பு கூறியது.

11 எண்ணி றந்தன சிற்றறி வினும்பல வியல்பி
னண்ணி நிற்பன சார்ந்ததன் வண்ணமாய் நவில்வ
அண்ணு சிற்றறி வினுஞ்சுதந் தரத்தன வல்ல
வுண்ண யந்தநா முணர்த்திடி னுணர்வன வுயிரே.

(பொருள்) உயிர்கள் என்பன எண்ணில்லாதவை; சிற்றறிவேயுடையன; அந்நிலையினும் பலவேறு இயல்புகளைப் பொருந்தி நிற்பவை; (பளிங்கு தான் சார்ந்ததன் வண்ணமாய்

நிற்பது போல) உயிர் எவற்றைச் சார்ந்திருக்கின்றனவோ அவற்றின் தன்மையாய் நிற்கும் இயல்பையுடையது; அமைந்துள்ள சிற்றறிவு கொண்டும் சுதந்திரமாய்த் தாமே எதையும் அறிபவையல்ல; அவற்றின் உள்ளுக்குள்ளாய்க் கலந்திருக்கும் நாம் (சிவம்) உணர்த்தினல்தான் எதையும் அவ்வுயிர்கள் உணரும்.

இயல்பு – இலக்கணம் அண்ணுதல் – பொருந்துதல்.
இஃது உயிரின் இயல்பு கூறியது.

12 மாயை சுத்தமே யசுத்தமே யெனவிரு வகையாம்
ஆய மாயைக ளிரண்டுமெய் யறிவுரு வல்லாற்
றேயு றுதநம் அருளினுற் றெழிலுற்று றுயிர்க்கு
மேய சீர்த்தனு வாதிக னுன்குமாய் விரியும்.

(பொருள்) மாயை என்பது சுத்த மாயை, அசுத்த மாயை என இருவகைப்படும்; அம்மாயைகள் இரண்டும் உயிர்களின் அறிவைச் சிறிது விளக்கும் தன்மையுடையவை; அன்றியும், அவற்றோடு ஒன்ருய்க் கலவாத மெய்ஞ்ஞான வடிவுடைய நமது அருட்சத்தியால் அவை தொழிற்பட்டு உயிர்கள் பலவற்றிற்கும் ஏற்ற உடம்பு, கருவி, உலகம், போகம் என்ற நான்காக விரிந்திருக்கும் எ–து.

இது மாயையின் இயல்பு கூறியது.

13 கரும மென்பது மாயையே கருவிக ளாகத்
தெருள்வ ழுங்குநம் அருளெனப் படுந்திரோ தானப்
பொருவில் சத்தியின் சகாயத்தாற் புல்லறி வுயிர்கண்
முருகு விம்மிய குழலினுய் முனைந்துசெய் தொழிலாம்.

(பொருள்) மணம் கமழும் கூந்தலையுடைய உமையே, கருமம் என்பது இருவகை மாயைகளையும் கருவியாகக்கொண்டு, மலம் நீங்குதற்குரிய பக்குவத்தை யுண்டு பண்ணும் நமது அருட் சத்தியின் கூறுகிய திரோதானமென்னும் ஒப்பில்லாத சத்தியின் துணையால், சிற்றறிவுடைய உயிர்கள் முந்துற்றுச் செய்யும் செயலாகும்.

தெருள் – விளக்கம். திரோதானம் – மறைப்பு. செயல் – வினை. முருகுவிம்மிய குழலினுய் – மணம் கமழும் கூந்தலை யுடையவளே.

14 புந்தி வாக்குரு வத்தினும் புரியுமன் னதுதான்
வந்து நல்லதுந் தீயது மெனவிரு வகையாம்
அந்த நல்லதுந் தீயதுஞ் சஞ்சித மாகிப்
பிந்தி யாருயிர்க் குணவுமாய்ப் பிறப்புக்கும் வித்தாம்

(பொருள்) மனம், வாக்கு, மெய் என்ற மூன்றாலும் செய்யப்படுவது அவ்வினை; அவ்வாறு செய்யப்பட்டு வந்து நல்லது என்றும், தியதென்றும் வினை இருவகைப்படும்; அவ்வினையிரண்டும் சஞ்சிதமாய் நின்று பக்குவப்பட்டு உயிர்கள் நுகரும் வினைப்பயனும் மேலே பிறப்பதற்கும் காரணமாகும். எ—து.

புந்தி – மனம். உணவு – இன்பமும் துன்பமும் ஆகிய பயன். வித்து – காரணம்.

15 உருவத் தாற்கரு மந்தவ வீட்டியு முருவங்
கருமத் தாற்றவ வீட்டியுங் காழ்த்தவா ணவமே
மருவத் தாழ்ந்தகே வலத்திடை மன்னிய உயிர்கள்
திருவத் தாஞ்சக லத்தியா னெனதெனச் செருக்கும்.

(பொருள்) வலிதாய் அனாதியாய் உள்ள ஆணவ மலம் ஒன்றுமே பொருந்திய உயிரது நிலை கேவலம் எனப்படும்; அந்தக் கேவலத்தில் கிடந்த உயிர் பின் உடம்பொடு கூடியிருப்பது சகலம் எனப்படும்; சகல நிலையில், உயிர் உடம்பைக் கொண்டு வினைகள் பல செய்தும். வினையால் உடம்புகள் பல எடுத்தும் பிறவிச் சுழலில் சுழன்று கொண்டிருக்கும்; அந் நிலையில் அவை யான் எனது என்று செருக்கித் திரியும் எ—து.

காழ்த்த – வலிய. திருவத்தாம் சகலம் – சிறப்புடைய சகலம். திரு – திருவம் என நின்றது.

16 இதமெ னப்படும் நல்வினை யின்பமே பயக்கும்
இதமெ னப்படாத் தீவினை யின்னலே பயக்கும்
மதர்நெ டுங்கணுய் மற்றவை யறிந்துசெய் வினையுங்
கதுவு நெஞ்சறி யாதுசெய் வினையுமாய்க் கலவும்.

(பொருள்) இத கன்மம் எனப்படும் நல்வினை, இன்பத்தை யும், அகித கன்மம் எனப்படும் தீவினை துன்பத்தையுமே கொடுக்கும்; மேலும், அவ்வினைகள் நெஞ்சறிந்து செய்வினை, நெஞ்சறியாது செய்வினை என இருவகையுமாகும் எ. து.

மதர் நெடுங்கணாய் – மதர்த்து நீண்ட கண்களை யுடையவளே. கதுவும் – பொருந்தும், கலவும் – கலந்து வரும்.

17 புடைபெ யர்ந்திடும் வினைபுடை பெயர்தரா வினையென்று
அடைவி னேதிய வவ்வினை யிவ்விதத் திரண்டாந்
தொடைம லர்க்குழன் மாயையுங் கருமமுந் தொகுத்துத்
தடைசெய் யாணவத் தொடும்மல மூன்றெனத் தருமால்.

(பொருள்) பொருளின் புடை பெயர்ச்சியும் வினை; புடை பெயராமையும் வினையே – இவ்வாறு வினை இரு வகையும் படும். மாயாமலமும், கன்ம மலமும், ஆணவ மலமும் சேர மலம் மூன் றென்று கூறப்படும். எ–து.

அடைவு – முறை. தொடை மலர்க்குழல் – பூமாலையணிந்த கூந்தலை யுடையவளே. தொகுத்து – சேர்த்து. தடைசெய் ஆணவம் – உயிரறிவைத் தடுத்து நிற்கும் ஆணவ மலம்.

இதுகாறும் வினையியல் கூறப்பட்டது.

18 மாயை காரிய மானமா மாயையும் நமது
தூய சீரரு ளனுந்திரோ தாயியுந் தொகுத்திட்டு
ஆயு நூன்மல மைந்தென வறைவது முண்டால்
தேயு நூலிடை வருத்திய திதலைமென் முலையாய்.

(பொருள்) மாயா காரியமான மாயேயத்தையும், (சிவமாகிய) நமது தூய சிறப்புப் பொருந்திய அருட் சத்தியின் ஒரு கூறாகிய திரோதாயியையும் கூட்டி ஆராய்ச்சி நூல்கள் மலம் ஐந்தென்று கூறுவதுமுண்டு. எ–து.

சுத்தம், அசுத்தம் என்ற இருவகை மாயையின் காரியம் மாயேயம் எனப்பட்டன. இவற்றோடு ஆணவம், கன்மம், திரோதாயி என்ற மூன்றும் கூட மலம் ஐந்தாகுமென அறிக. தேயும் நூலிடை வருத்திய திதலை மென் முலையாய் – நுண்ணிய நூல் போன்ற இடையை வருத்துகின்ற தேமல் படர்ந்த கொங்கைகளை யுடையவளே. மல பரிபாகத்தின் பொருட்டு மலசத்திகளை ஏவி நிற்கும் நிலைமையால் சிவசத்தி திரோதாயி மலம் என உபசரிக்கப் பெறுகின்றது. திரோதம் – மறைப்பு.

19 இனைய வைம்மல பந்தமு மிரெண்டெனும் பழைய
வினையும் வன்மல வேருமான் மாவினுக் கல்லால்
தினையும் நந்தமக் கில்லைநந் திருவரு ளொழிய
வனைய மாயையுங் கருமமு மாவியு மசையா.

(பொருள்) இந்த மலங்கள் ஐந்தினுடைய சம்பந்தமும், நல்வினை தீவினைகட்குக் காரணமான விருப்பு, வெறுப்பு என்னும் மூலகன்மத் தொடர்பும், வலிய ஆணவமலத் தொடர்பால் உண்டாகும் வாதனையும் ஆன்மாவாகிய உயிர்க்குளவேயன்றிச் சிவமாகிய நமக்குச் சிறிதும் இல்லை. நம்முடைய அருட்சத்தி, உடன் நின்று இயக்கினாலன்றி மாயை, கன்மம், உயிர் முதலிய எல்லாப் பொருள்களும் தாமாக இயங்கா. அங்ஙனமாயினும் எவ்வகைப் பந்தமும் நம்மைத் தொடரமாட்டா என அறிக.

இனைய – இந்த. அனைய – அந்த. தினை – சிறிது. ஆவி – உயிர். இது மல மாயைகளின் சம்பந்தம் பதிப்பொருட்கு இல்லை யென்று கூறியது.

20 இந்த மாயையுங் கருமமும் பந்தமே யிவற்றைத்
தந்த தாருயிர்க் கென்னெனிற் சாற்றுதுங் கேண்மோ
முந்து மாணவ முரண்கெட மூட்டின மாசு
சிந்த வேறுமா சறுவையிற் செறித்திடு மாபோல்.

(பொருள்) இந்த மாயை கன்மங்களும் மலபந்தமேயாக. அனாதியே மலத்தோடு கட்டுற்ற உயிர்களுக்கு இவற்றைத்

தந்தது ஏனென்றால், சொல்லுவோம் கேட்பாயாக. ஆன்மாக்களை அனாதியே பந்தித்துக் கிடக்கும் ஆணவத்தின் தொடர்பைக் கெடுத்தற்காக, நாம் உயிர்களுக்கு இவற்றைக் கூட்டினேம்; மலத்தைப் போக்குகிறோமென்று மேலும் பல மலங்களைச் சேர்ப்பது முறையோ என்றால், ஆடையில் ஏறிய அழுக்கைப் போக்குவதற்காக உவர்மண்ணாகிய அழுக்கையும், சாணமாகிய அழுக்கையும் சேர்ப்பது போல இவ்விரு மலங்களையும் சேர்த்தோம் என அறிக. எ—து.

முந்தும் — முற்பட்டு நிற்கும். ஆணவமுரண் — ஆணவத்தின் வலிமை. மூட்டினம் — கூட்டினேம். மாசு — அழுக்கு. அறுவை — உடை. இது மாயை கன்மங்களின் சேர்க்கைக்குக் காரணம்கூறியது.

21 படைத்த லும்புவ னங்களைப் பாதுகாத் தலும்பின்
துடைத்த லுந்தக நிறுத்தலு மருடுறுத் தலுமென்று
அடுத்த வைந்தொழி லயன்முத லைவரு மாய்நாம்
எடுத்து நின்றன மாயினு மெமக்கிலை விகாரம்.

(பொருள்) உலகங்களைப் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளுதல் என (சிவமாகிய) நமக்கு அடுத்த ஐவகைத் தொழில்களையும், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்ற ஐந்து வடிவங்களையெடுத்து நாமே செய்கின்றோம்; அப்படிச் செய்தாலும் எமக்கு அதனால் ஒரு வேறுபாடும் (விகாரமும்) கிடையாது. எ—து.

துடைத்தல் — அழித்தல், ஒடுக்குதல். தக நிறுத்துதல் — உடல் கருவி முதலியவற்றால் விளையும் சுக துக்கங்களை அவற்றின்கண் அதுவதுவாய் அழுந்திநின்றனுபவித்தல். அருள் துறுத்தல் — திருவருள் இன்பத்தில் மூழ்குவித்தல்.

விகாரமுறுவதற்குக் காரணம் பாதந்திரம். சுதந்திரமுடைய இறைவனுக்கு எவற்றாலும் விகாரமுண்டாதல் இல்லையென்க.

ஐந்தொழில் செய்யும் இறைவன் இயல்பு கூறியது.

22 விரவு மாயையெம் முடைமை யற்றாயினும் விடந்தான்
அரவை யென்செய்யு மங்கியைச் சூடெவன் செய்யும்
பரவு மிந்திர ஞாலம்பண் ணுநரையென் செய்யுங்
குரவ மாலையா யெமக்கது கொடாதுகாண் மயக்கம்.

(பொருள்) எம்முடைய சத்தியை ஆதாரமாகக்கொண்டு அதன்கண் விரவியிருக்கும் மாயையாகிய சத்தி, எமது உடைமையாகும்; அவ்வாறாயினும், எப்படிப் பாம்பினிடத்திலிருக்கும் விடம், அப்பாம்பைப் பற்றுவதில்லையோ, நெருப்பினது சுடுந்தன்மை அந்த நெருப்பைப் பாதிப்பதில்லையோ, இந்திர ஜாலம் செய்யும் ஒருவனை அது எப்படி மயக்குவதில்லையோ அப்படியே அந்த மாயாசத்தி எம்மைப் பற்றமாட்டாது. எ—து.

அரவு – பாம்பு. அங்கி – நெருப்பு. பண்ணுநர் – செய்பவர். குரவ மாலையாய் – குரா மலரால் கட்டப்பட்ட மாலையை யுடையவளே. காண் – அசை.

23 அல்ல தூஉமிரு ளாணவ மயக்குவ வதனு
னல்ல மாயையுங் கருமமு நாடிய வுயிரை
வல்ல வாறெலா மயக்குவ மயக்குமா ணவந்தேய்ந்
தில்லை யேலவை யுயிரையு மயக்குவ தில்லையே.

(பொருள்) அன்றியும், மாயை, கன்மங்கள் உயிரை மயக்குவதற்குக் காரணம், உயிர் அறியாமையைச் செய்யும் ஆணவ மலத்தோடு கூடியிருப்பதனாலேதான், ஆகையால், உயிர்க்கு நல்ல துணையாக வந்த மாயையும், வினையும் மலபந்தத்தைப் போக்குதற்கு நாடும் உயிரை, அம்மல சத்தி கூடியுள்ளவரையில் மயக்கும்; ஆணவ மலத்தின் மறைப்புச் சத்தி உயிரினின்றும்

தேய்ந்தொழியுமாறல் மாயை கன்மங்களால் மயக்கமுண்டாகாது. எ—து.

அறியாமையால் உண்டாவது மயக்கம்; ஆணவம் தேய்ந்த வழி மாயை கன்மங்கள், காணும் கண்ணுக்குச் சூரியவொளிபோல உயிர்க்கு உதவியாகும்.

24 தேங்கு பேரொளி யாகிய சிவமெனு நாமும்
நீங்கு றுதநஞ் சத்தியாய் நிலைபெறும் அருளுந்
தூங்கு மாவியுந் தொடர்திரோ தாயியும் பிந்த
ஓங்கு மாணவத் தெறுழ்வலி யுரைப்பரி தணங்கே.

(பொருள்) நிறைந்த அறிவொளியாகிய சிவமென்று கூறப்படும் நாமும், நம்மிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிலை பெறும் சத்தியாகிய அருளும், சத்தியின்கண் ஒடுங்கும் ஆன்மாவும், ஆணவத்தைத் தொடர்ந்து நின்று மறைத்து நிலவும் திரோதாயியும் ஆகிய இவை நீங்கலாக முற்பட்டு ஓங்கி ஆன்மாவை மறைத்து நிற்கும் ஆணவ மலத்தின் சத்தியை உரைப்பது அரிது. எ—து.

ஆணவமலம், சிவமும், அருளும், ஆன்மாவும் திரோதாயியும் அறியப்படாதவண்ணம் மறைத்தலின், அதன் வன்மை மிகவும் பெரிது என்பது. தேங்குதல் – நிறைதல். தூங்கும் ஆவி – அருளோடும் கூடிய ஆன்மா. எறுழ்வலி – மிகுந்த வன்மை. அணங்கு – தெய்வப் பெண்.

25 கரிய வாணவந் தேயுமா கலந்தநஞ் சத்தி
உரிய தாஞ்சிவ புண்ணிய முடன்விரா யூட்டும்
பெரிய வாட்கணுய் பின்மல பாகமாம் பின்னர்
விரியுஞ் சத்திநி பாதம்பின் வினையொப்பு மேவும்.

(பொருள்) அறியாமையாகிய இருளைச் செய்யும் ஆணவ மலம் தேய்ந்தொழிவது குறித்தே, நம் அருட்சத்தி அதனோடு

கலந்து மறைத்தற்குத் துணைபுரிவது போல் உடனிருந்து ஆன்மாவைச் சிறிது சிறிதாகச் சிவபுண்ணியங்களிற் செலுத்தி நிற்கும். அதனால் மலசத்தி சிறிது சிறிதாகத் தேய்ந்தொழிந்து பக்குவமடையும்; அதன்பின்பு, ஆணவமலத்தோடு கூடி அதன் சத்தியைத் தொழிற்படுத்தும் திரோதான சத்தியின் தொழில் வீழும்; அதனால் ஆன்மாவுக்கு அறிவு விளக்கம் உண்டாவதால் நல்வினை தீவினைகளின் பயனை ஒப்பக்கருதும் இருவினை ஒப்பென்னும் உணர்வு தோன்றிப் பொருந்தும். எ—து.

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், என்பவை ஞானப் பேற்றுக்கு வாயில்கள். பெரியவாட்கணாய் – விசாலமான ஒளிபொருந்திய கண்களையுடையவளே.

26 ஆய வேலையின் மலமென வறைதிரோ தாயி
மாயி ரும்பொருள் யாவையும் மாறவே மாறித்
தூய வின்னரு ளாகியே நின்றிடுந் தோகாய்!
ஏயு மிவ்வரு ளாலல திருதுயிர்க் கிருளே.

(பொருள்) அக்காலத்தில் மலத்தோடு கலந்து அதன் சத்தியைத் தொழிற்படுத்தி நின்றமையின் மலமென்று உபசரித்துக் கூறப்பட்ட திரோதான சத்தி, பின் அருட்சத்தியாக மாறிப் பெரிய பொருள்களாகிய தனுகரணங்களெல்லாம் சிவமாய்த் தோன்றும் வண்ணம் செய்து தூய இன்பத்தை நல்கும், திருவருட் காட்சியைக் கொடுக்கும். இத்திருவருள் ஞானம் விளங்காதாயின், ஆன்மாக்களுக்கு அறியாமையாகிய இருள் கெடவே கெடாது.

அறை திரோதாயி – சொல்லப்பெற்ற திரோதான சத்தி. தோகாய் – மயில் போன்றவளே. ஏயும் – பொருந்தும். இருது – கெடாது.

27 இச்சை ஞானமும் கிரியையு மானவிவ் வருளே
துச்சி லாகிய கலாதியிச் சையுந்துலைத் திட்டு
வெச்செ னுணவம் விழுங்கிடப் பட்டவா ருயிரின்
இச்சை யாதியும் விளக்கியுள் ளிருந்திமே லாகும்.

(பொருள்) இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி என விரியும் இவ்வருட் சத்தி, கலை, வித்தை, அராகம், காலம், நியதி என்னும் ஐவகைத் தத்துவங்களால் இயன்ற கஞ்சுகவுடம்பின் கண் நின்று, இன்பமும் துன்பமுமாகிய போகங்களை நுகருமிடத்துண்டாகும் விருப்பு வெறுப்புக்களைப் போக்கித், தாழ்ந்ததாகிய ஆணவ இருளால் விழுங்கப்பட்டுள்ள உயிர்களின் அறிவு இச்சை செயல்களாகிய சத்திகளை விளக்கித் தன்னுள் அடக்கித் தான் அவற்றிற்கு மேலாய் விளங்கி நிற்கும். எ—து.

துச்சில் — போகம் நுகருமிடம். வெச்சென — தாழ்வு குறிக்கும் குறிப்பு மொழி.

28 பிறிவு றுதவெம் அருளினு லெம்மையும் பெயரா
மறிவி னீங்கிய தன்னையும் மலைவறத் தெரிந்த
அறிவு பானுவின் விழியென வெம்முளே யடங்கிச்
செறியு மானந்த மொன்றுமே திளைக்குந்தே மொழியாய்.

(பொருள்) எம்மோடு பிரிப்பின்றி யிருக்கும் திருவருள் ஞானத்தால், சிவமாகிய எம்மையும் பிரியாது நிற்கும். அன்றியும் தன்னைத் தடுத்து நின்ற மல மறைப்பிலிருந்து நீங்கி விளங்கும் அவ்வான்மா, தன்னையும் தெளிவுறக்காணும் அங்ஙனம்கண்ட ஆன்மா, சூரிய வொளியில் கண்ணொளிஒடுங்கி நிற்பதுபோல் தனதறிவு திருவருட் பேரறிவிலே ஒடுங்கி, அங்கே பிறக்கும் பேரின்பமொன்றையே நுகர்ந்து கொண்டிருக்கும். எ—து.

தேமொழி — இனிய சொற்களையுடையவளே.

29 மருளி னுன்முத லென்றலு மன்னுயி ரருள்கண்டு
அருளி னுன்முத லென்றலு மருண்முத லென்றுந்
தெருளி லாததி லழுந்தலுந் தீர்ந்தெம்மோ டறிவாய்
இருள்செய் கேவலம் போற்கலந் திருப்பதே முத்தி.

(பொருள்) நிலை பேறுடைய உயிர், பசுகரணங்களோடு கூடி நின்ற சகல நிலையில் தானே முதன்மையுடைய பொருள்

என்று செருக்குறும், பின்னர்த் திருவருட்டுணையால் சிவமாகிய நம்மோடு கூடிய நிலையில் சிவ சமமாவேனென்று முனைப்புறும். இனித் திருவருட்டுணைகொண்டு அறிகின்ற நிலையில் தானே அறிவதாக நினைக்கும் தற்போதம் உறும். இம்மூவகை நிலையும் கடந்து, எங்ஙனம் ஆணவ மலத்தோடு அத்துவிதமாய்க் கலந்து கிடந்த கேவலநிலையில், அறியாமையே சொரூபமாய்க்கிடந்ததோ அதுபோலச் சிவமாகிய நமது திருவடியில் அத்துவிதமாய்க் கலந்து நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி நிற்கும். இதுவே வீடு பேறாகும். எ—து.

மருள் – பசுபோதம் அருள் – திருவருள் ஞானம். இருள்செய் கேவலம் – ஆணவம் ஒன்றோடேயே பிரிப்பின்றிக் கலந்து அறியாமை இருளிலே இருக்கும் நிலை. இது சித்தாந்த அத்துவித முத்தி நிலை கூறியது. தாயுமானவரும் இவ்வாறே கூறுவர்.

30 பேத மாகிய பாவனை பேணுவ தெல்லாம்
ஏத மாகிய பந்தமே யெனதியா னெனுமால்
போத வாருயி ரபேதபா வனைபுரி வஃதே
மாத ராயுயர் முத்தியென் றுரைத்திடும் மறையும்.

(பொருள்) சிவத்தை வேறாக வைத்துச் செய்யும் துவித பாவனை யெல்லாம், குற்றமாகிய மலபந்தத்துக்கே காரணமாம்; யான் என்றும், எனதென்றும் கருதும் மயக்கமின்றி ஆன்மா, சிவத்தை அபேதமாகக் கொண்டு சிவோகம் பாவனை புரிவதே முத்திக்கேதுவாம் என வேதகாமங்கள் கூறும் எ—து.

மாதராய் – உமாதேவியே. ஏதம் – குற்றம். மால் – மயக்கம். போத – நீங்க. புரிவது, புரிவஃது என ஆய்தம் விரிந்து நின்றது. "தேர்ந்து செய்வஃதே முறை" (குறள்) என்றாற்போல. உயர்முத்தி – வேதாந்தத்தின் உச்சியில் விளங்கும் சித்தாந்த முத்தி.

31 பரிதி முன்னிரு ளெனமலம் பரையிடை மாயும்
கருவி முன்பகல் விளக்கொடு கடுக்குமு மொன்றே
மருவு மன்னதுங் கருணையால் வாங்குவம் யாமே
பொருவில் சஞ்சித முன்னரே யழிந்தது பூவாய்.

(பொருள்) சூரியனொளியில் இருள் ஒடுங்குவதுபோலத் திருவருளிடத்தே மலத்தின் மறைப்புச் சத்தி ஒடுங்கும்; பகலொளியில் விளக்கொளிபோல் திருவருள் ஒளியில் மாயா காரியமாகிய கருவிகளின் அறிவு அடங்கிவிடும்; இவ்வாறடங்கி யொழுகும் சீவன்முத்தி நிலையில், வினையுண்டாதற்கிடமின் றாதலால், பிராரத்தமென்னும் ஊழ்வினை யொன்றே உடம்புள வாய் நிற்கும்; அதுவந்து பயன்தருதற்கேற்ற பசுத்துவ கரணங் கள் இல்லாமையால், நாம் கருணையோடு பற்றுக்கோடின்றி நிற் கும் பழவினையை ஏன்று கொள்வோம். எ—று.

பனை — அருட்சத்தி. மாயும் — மறையும். கடுக்கும் — ஒக்கும். அன்னது — அவ்வினை. பொருவில் சஞ்சிதம் — ஒப்பில்லாத சஞ்சித கன்மம். பூவாய் — பூக்களையணிந்தவளே. இது சீவன்முத்தரை ஊழ்வினை தாக்காமைக்கு ஏதுக்கூறியது.

32 ஏன்ற வூழுட லிருத்தலி னேறும்வல் வினையும்
தோன்று மேற்றிரு வெழுத்தினைச் சூழ்ந்திடி னழியும்
சான்ற வீட்டினைச் சார்ந்தவர் தமக்குமா லயமுன்
மூன்று மார்வமோ டிறைஞ்சுதன் முறைமையா மணங்கே.

(பொருள்) நீங்காது நிற்கும் ஊழ் வினையால் உளதாகிய உடம்பு இருப்பதால், வினைக்கு வாயிலாக நிற்கும் கருவிக ளிடத்தே பயிற்சி காரணத்தால் உளதாகும் வாதனையால் வலிய வினைபுகுந்து மிகுதற்கும் இடமுண்டு; ஆதலால், அவ்வாதனை தோன்றுங்கால் திருவைந்தெழுத்தை யோதினால், அது கெடும். பேரின்பமான வீடு பெற்றுள்ள சீவன்முத்தர்களுக்கும் நம் (சிவன்) கோயிலை வழிபடுவதும், சிவனடியாரை வழிபடுவதும் திருவைந்தெழுத்தை யோதுவதும் முறைமையாம். எ—று.

வாதனை, பயிற்சி, சமஸ்காரம் என்பன ஒருபொருளன. முத்தர் மனமெல்லாம் சிவத்தின்பாலே இருப்பினும், உடம்போடிருப்பதால் வாதனை வயத்தால் வினையுண்டாதற்கும் இடமுண்டென்பது பற்றி கூடி

"ஏறும் வல்வினை தோன்றுமேல்" என்றார். இவ்வாதனையை அறுத்தற்கே, திருவள்ளுவரும் மெய்யுணர்தற்குப்பின் அவா வறுத்தலைக் கூறினர். சீவன் முத்தர் உடம்போடிருப்பினும், அவ்வுடம்பு நீங்கினதும் பரமுத்தி சார்வது திண்ணமாதலால், "வீட்டினைச் சார்ந்தவர்" என இறந்த காலத்தாற் கூறினர். ஆலய முதலிய மூன்று — சிவன் கோயில், சிவனடியார், திருவைந்தெழுத்து.

33 தொடுத்த நின்பெருங் கடாவினுக் கவிர்பொலந் தொடியாய்
விடுத்த னம்விடை யறிகென விமலனு ரருள
மடுத்த வன்பொடு கேட்டமால் வரைமக ளோடுந்
தடுத்த வைம்பொறி நந்தியுஞ் சம்புமா முனியும்.

(பொருள்) விளங்குகின்ற பொன்வளை யணிந்த உமையே; "நீ கேட்ட பெருமை பொருந்திய வினுக்களுக்கு இப்போது விடை கூறிவிட்டோம்; இதனைத் தெளிந்து கொள்க" என்று நின்மலனாகிய இறைவன் உரைத்தருளவும், மிக்க அன்போடு கேட்ட பெரிய மலையரசன் மகளாகிய அம்மையார் (இறைவனது யோக நிலையின் பொருளுணர்ந்து மகிழ்ந்தனர்) பொறிவாயில் ஐந்தவித்த நந்திதேவரும் சம்பு முனிவரும். எ—து.

கடா — வினா. அவிர்பொலம் தொடி — விளங்குகின்ற பொன்னால் செய்யப்பட்ட வளை. விமலன் — மலமில்லாதவன். மடுத்த அன்பு — நிறைந்த அன்பு.

34 அருளெ லாமுளத் தழுத்தினர் தெளிந்தனர் நிட்டை
மருளெ லாந்தப மருவினர் மன்னுமுப் பாழு
மொருவி மேற்பெரும் பாழெனு முலப்பிலா னந்தப்
பொருளொ டேகமாய்ப் பொருந்திடு முத்தரா யிருந்தார்.

(பொருள்) சிவபெருமான் உரைத்தருளிய அருளுரைகளைக் கருத்துறக் கேட்டு ஐயந்திரிபறத் தெளிந்து நிட்டை

கூடினர்; மாயைநிலை, சீவநிலை, பணைநிலை என்ற முப்பாழும் நீங்கி அவற்றின் மேலோங்கிய பெரும்பாழாகிய சிவானந்த எல்லையில் சிவபரம்பொருளோடு ஏகமாய் நிற்கும் சித்தாந்த முத்தராய்த் திகழ்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்ட தேவன் திருவடி வாழ்க.

S. KUTTALALINGAM PILLAI & 2 OTHERS,
LICENCIES: M. E. No. 3.
LEVINGIPURAM SALT FACTORY,
51, VADY STREET,
TUTICORIN.

சைவப்பிரகாசம் பிரஸ், தூத்துக்குடி.